**M.C. 10 of 2025** **Previous Date : 31.10.2025**

**PW1**

**வித்யா, க/பெ.குமார்**

**06.03.2026**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 06.03.2026.**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8வது வரை படித்துள்ளேன். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு அக்கா, ஒரு தம்பி இருக்கிறார்கள். எனது அப்பா என்ன செய்கிறார் என்றால் என் அப்பா இறந்து 10 வருடங்களுக்கு மேலாகிறது. எங்கள் திருமணத்திற்கு முன்பே என் அப்பா இறந்துவிட்டார். எனது அம்மா என்ன செய்கிறார் என்றால் சமையல் வேலைக்கு செல்கிறார். எனது திருமணத்தின்போது எதிர்மனுதாரர் 7 பவுன் தாலி செயின் போட்டாரா என்றால் மூன்று பவுன் மட்டும் போட்டார், அதையும் எதிர்மனுதாரர் வாங்கி கொண்டார். திருமணம் முடிந்த பின்பு நான் எதிர்மனுதாரருடன் குஜராத் சென்று அங்கு குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். குஜராத்தில் எத்தனை வருடம் இருந்தோம் என்றால் மூன்று வருடங்கள் இருந்தோம். குஜராத்தில் எதிர்மனுதாரர் என்னை நல்ல படியாக பார்த்து கொண்டதால் தான் இரண்டு குழந்தைகள் பிறந்தது என்றால் ஒரு வருடம் நன்றாக பார்த்து கொண்டார், இரண்டாவது ஆண்குழந்தை வேண்டும் என்று சொல்லி குழந்தை பிறந்தது. இரண்டாவது ஆண்குழந்தை வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார் என்று காவல் துறையிலும், சமூக நலத்துறையிலும் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. குஜராத்தில் என்னை கொடுமைப்படுத்தினார் என்று மனுவில் சொல்லியுள்ளதற்கு குஜராத் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. குஜராத்தில் இருந்து திரும்பி வந்த பின்பு நானும், எதிர்மனுதாரரும் தனிக்குடுத்தனமாக எங்கு குடியிருந்தோம் என்றால் நரிக்கல்பட்டியில் குடியிருந்தோம். நரிக்கல்பட்டியில் எத்தனை வருடங்கள் நாங்கள் இருந்தோம் என்றால் 4 வருடங்கள் இருந்தோம். திருமணமாகி 8 வருடங்களாக எனக்கும், குழந்தைகளுக்குமான தேவைகளை எதிர்மனுதாரர் நன்றாக பார்த்து கொண்டாரா என்றால் இல்லை, மது, கஞ்சா அருந்திவிட்டு என்னை கொடுமை செய்வார். மது, கஞ்சா அருந்தி என்னை கொடுமை செய்தார் என்று கீரனூர் காவல் நிலையத்தில்

அல்லது மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

2. எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு 70 வயது இருக்குமா என்றால் 65 வயது இருக்கும். எதிர்மனுதாரரின் தாயாருக்கு 65 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் 55 முதல் 60 வயது இருக்கும். எதிர்மனுதாரரின் பெற்றோர் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டிருக்கிறார்கள் என்றால் நான் இருக்கும் வரை அப்படி இல்லை. எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு ஆஸ்துமா பிரச்சனை இருக்கிறது என்றால் அவர் அதிகமாக பீடி குடிப்பதால் இழைப்பு இருந்தது. எங்கள் இரண்டு குழந்தைகளுக்கும் பிரசவ சிகிச்சையை தனியார் மருத்துவமனையில் எதிர்மனுதாரர் தான் பார்த்து கொண்டார் என்றால் சரியல்ல, என் அம்மா பார்த்துக் கொண்டார். நான் என் கணவருடன் இருந்தபோது என் அம்மாவுக்கு பணம் அனுப்பினேனா என்றால் இல்லை, நான் தான் என் அம்மாவிடம் பணம் வாங்கினேன். நான் தற்போது 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். எனது கணவர் என்னை என் பெற்றோர் வீட்டிற்கு விட்டாரா, நான் என் அம்மா வீட்டிற்கு வந்தேனா என்றால் என் கணவர் என்னை கொடுமைப்படுத்தி விரட்டியதால் என் அம்மா வந்து எங்களை கூட்டி கொண்டு வந்தார். என்னை அடித்து விரட்டியதாக அன்றைய தேதியில் நானோ, என் அம்மாவோ காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்களின் பெற்றோர் தற்போது தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் ஆமாம், ஒரே தோட்டத்தில் தனியாக வசித்து வருகிறார். எதிர்மனுதாரர் அவரது பெற்றோருக்கு ஒரே ஆண் வாரிசு என்றால் சரிதான், ஒரு அக்கா இருக்கிறார். எதிர்மனுதாரரின் பெற்றோரை எதிர்மனுதாரர் தான் மருத்துவ சிகிச்சைக்கு அழைத்து செல்கிறார் என்றால் இல்லை. எதிர்மனுதாரின் பெற்றோர் சமீபத்தில் அவர்களின் நிலத்தை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான், குழந்தைகளுக்கு பணம் வைப்பீடு செய்கிறேன் என்று என்னை அழைத்து சென்றார்கள், பணம் வைப்பீடு செய்யவில்லை. எதிர்மனுதாரர் என்னையும், குழந்தைகளையும் நன்றாக பார்த்து கொண்டிருந்தார் என்றாலும் அதனால் தான் நரிக்கல்பட்டியில் நானும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரியல்ல, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை என்னை கொடுமை செய்வார். நரிக்கல்பட்டியில் எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் பணம் வாங்கி எனக்கு தரவில்லை என்று நானாக எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும் எதிர்மனுதாரர் கொடுமை செய்யவில்லை என்றாலும்

சரியல்ல. நான் விவாகரத்து கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

3. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ கேட்டு மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அறிவிப்பு வரவில்லை. நான் மனுவில் சொன்னதுபோல் எந்த கொடுமையும் நடக்கவில்லை என்றாலும், உண்மையில் நடந்திருந்தால் அப்போதே காவல் துறையிலும், சமூக நலத்துறையிலும் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல, குழந்தைகள் இரண்டு பேரும் சிறு குழந்தைகளாக இருந்ததால் எதிர்மனுதாரரின் பெற்றோர் வயதானவர்களாக இருந்ததால் அப்போது புகார் கொடுக்கவில்லை. எதிர்மனுதாரரின் பெற்றோர் நிலம் விற்ற பணத்தை குழந்தைகள் பெயரில் வைப்பீடு செய்ய கேட்டபோது நான் என் கையில் கொடுக்க வேண்டும் என்று சொல்லி கேட்டு பிரச்சனை செய்து எனக்கு தரவில்லை என்பதால் வேண்டுமென்றே பழி வாங்க வேண்டுமென்று இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எப்போதும் போதையில் இருந்ததால் குழந்தையின் எதிர்காலம் பற்றி கேட்டேன். நான் தானாக வந்தபிறகு எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ முயற்சி செய்தபோது நானும், எனது அம்மாவும், எனது அக்கா குடும்பமும் எதிர்மனுதாரரை அவமானப்படுத்தி குழந்தையை கூட பார்க்க விடாமல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் தான் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினார். எதிர்மனுதாரரின் பெற்றோர் சொத்தை அவர்கள் உயிருடன் இருக்கும்போதே எனது பெயருக்கும், குழந்தைகள் பெயருக்கும் எழுதி கேட்டேன் என்றாலும், அவ்வாறு எழுதி கொடுக்கவில்லை என்பதால் தான் நான் வந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரின் பெற்றோர் அவர்களுக்கு ஒரே ஆண் வாரிசு என்பதால் அவர்கள் இறந்த பின்பு சொத்து குழந்தைகளுக்கு வந்துவிடும் என்று சொன்னபோது நான் தான் உடனே தர வேண்டும் என்று கேட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் தான் கொடுமை செய்தார். எதிர்மனுதாரர் தற்போதும் என்னையும், குழந்தையையும் அழைத்து சென்று பார்த்து கொள்ள தயாராக இருக்கிறார் என்றாலும் நான் தான் உதாசினப்படுத்தி வந்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, எனக்கும், குழந்தைகளுக்கும் எதிர்மனுதாரருடன் இருந்தால் பாதுகாப்பு இல்லை, அவர் எப்போதும் போதையில் இருக்கிறார். நான் சொல்வதை எதிர்மனுதாரர் கேட்க வில்லை என்பதால் கஞ்சா, மது போதையில் இருக்கிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிர்மனுதாரர் கஞ்சா, மது போதையில்

இருந்திருந்தால் சந்தோசமாக இருந்து இரண்டு குழந்தைகள் பிறந்திருக்காது என்றால் 5 வருடம் மது அருந்தினார், 3 வருடம் கஞ்சா அருந்தினார். எதிர்மனுதாரர் அவ்வாறு மது, கஞ்சா பழக்கம் கொண்டிருந்தால் நானும், எனது பெற்றோரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்பதால் அவர் அவ்வாறு பழக்கம் கொண்டவர் அல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக இருந்தும் நான் வேண்டுமென்றே உதாசினப்படுத்தி வந்துவிட்டதால் சட்டப்படியாக எனக்கு ஜீவனாம்சம் கிடைக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. இன்று வரை எதிர்மனுதாரர் குழந்தைகளின் செலவை பார்த்து கொண்டிருக்கிறார் என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.03.06 18:05:11 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.